புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • பிப்ரவரி 01, 2024 • புரட்சி 24 • முழக்கம் 03 • விலை ரூ.3.00



# இந்தியை மண்டியிடச் செய்த சிங்கங்கள்

(21.01.2023 அன்று சேலத்தில் நடைபெற்ற திமுக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் வெளியிடப்பட்ட மாநாட்டு மலருக்காக கழகத் தலைவர் எழுதிய சிறப்புக் கட்டுரை)

கொளத்தூர் மணி



இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணிப்பது என்ற மொழியை மையமாகக் கொண்ட அரசியல் நூறாண்டு கால வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டதாகும். இந்திய விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலகட்டத்தில் மொழியால் மக்களை ஒன்றிணைத்தால் இந்திய விடுதலையை எளிதாக அடைய முடியும் என்பது காந்தியாரின் கணிப்பாகவும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட காங்கிரஸ் தலைவர்களின் விருப்பமாகவும் இருந்தது.

31.7.1917 அன்று இன்றைய குஜராத் மாநிலம் பரோச்சில் நடந்த கல்வி மாநாட்டில் காந்தியார் இந்தியாவின் பொதுமொழி குறித்து அழுத்தமாகப் பதிவு செய்தார். அதற்கான எதிர்ப்புக்குரல் தமிழ்நாட்டிலிருந்து உடனே வெளிப்பட்டது. நீதிக் கட்சியின் நாளேடான 'திராவிடன்' இதழில் அடுத்த நாள் 1.8.1917 அன்று 'மிஸ்டர் காந்தியும் இந்தியும்' என்று இந்தி எதிர்ப்புத் தலையங்கம் வெளிவந்தது. தொடர்ந்து மூன்று கட்டுரைகள் அதே மாதத்தில் வெளிவந்தன.

ஆனாலும், தொடர்ந்து இந்தியை முன்னிறுத்தி வந்த காந்தியடிகள் 1918 ஆம் ஆண்டு சென்னையில் தட்சிண பாரத் இந்தி பிரச்சார சபா என்ற அமைப்பைத் தொடங்கி வைத்தார். அதோடு விட்டாரா காந்தி? "திராவிடர்கள் சிறுபான்மையராக இருப்பதால் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ளவர்கள் திராவிட இந்தியாவில் உள்ளவர்களுடன் பேசுவதற்கு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்வதை விட இந்தியாவின் பிற பகுதிகளில் பொது மொழியாக உள்ள இந்தியைச் சிறுபான்மையினரான திராவிடர்கள் கற்றுக் கொள்வதுதான் தேசியப் பொருளாதாரத்திற்கு நல்லது" என்று தனது 'யங் இந்தியா' இதழில் எழுதினார்.

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் எப்படித் தொடங்கியது?. அதன் தொடக்கமாக சென்னை மாகாணத்தின் முதல்வரான ராஜகோபாலாச்சாரி 10.8.1937 அன்று ராமகிருஷ்ணா மடத்தில் நடைபெற்ற மாணவர் இல்லக் கூட்டத்தில் உரையாற்றியபோது சென்னை மாகாணத்தில் உள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக வைக்கப் போவதாகக் குறிப்பிட்டார். "இதற்காக இந்தி பாடநூல்கள் விரைவில் எழுதப்பட வேண்டும்; புதிய இந்தி எழுத்துகளைத் தமிழ்நாட்டு மாணவர்கள் கற்றுக்கொள்ளத் தொடங்கி விடுவார்களேயானால் பிறகு இந்தி, சமஸ்கிருதத்தை அவர்கள் எளிதில் பயில வாய்ப்பு ஏற்பட்டுவிடும்" என்று பேசினார்.

இதற்கு முதல் எதிர்வினை 22.8.1937 நாளிட்ட குடி அரசு இதழில் 'சுயாட்சியா? பழிவாங்கும் ஆட்சியா?' என்ற தலைப்பில் பெரியார் எழுதிய தலையங்கத்தில் வெளிப்பட்டது. "இந்தி கட்டாயப் பாடமாகும் பட்சத்தில் கண்டிப்பாக பார்ப்பனர் அல்லாத பிள்ளைகள் நூற்றுக்கு 90-க்கு மேல் தேர்ச்சியில் தவறிவிடுவதோடு பார்ப்பனப் பிள்ளைகள் நூற்றுக்கு நூறு ப்ரைஸ் விழுந்து தேர்ச்சி பெற உதவியாய் இருக்கும்" என்பது முதல் எதிர்ப்புக் காரணமாகக் கூறியிருக்கிறார்.

இவ்வாறான எதிர் வாதங்களை முன்வைத்ததற்குப் பின்னர் இரண்டு செயல் திட்டங்களைக் கூறினார் பெரியார். இந்தி மொழித் திணிப்பு பார்ப்பனர் அல்லாத மாணவர்களைக் கல்வியில் முன்னேறுவதைத் தடுக்கும். எனவே பார்ப்பனரல்லாத சமுதாயப் பெற்றோர்களே, போராட்டத்திற்கு உதவுங்கள் என்பது ஒன்று. அடுத்து தமிழ்நாடு தழுவிய இந்தி எதிர்ப்பு வழிநடை பரப்புரைப் பயணம் நடத்துவதன் வழியாக, மக்களுக்கு இந்தி எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது.

8.5.1938 நாளிட்ட குடி அரசு இதழில் "இந்தி வந்துவிட்டது! இனி என்ன ஒருகை பார்க்க வேண்டியதுதான்!" என்ற தலையங்கத்தை பெரியார் அவர்கள் தீட்டி தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான அழைப்பாக விடுத்தார்.

## அந்தத் தலையங்கம் சொல்லும் செய்தி என்ன?

முதலாவது, அமைக்கப்பட்ட இந்தி எதிர்ப்பு வாரியத்தின் அறிவுரைப்படிதான் செயல்பட வேண்டுமே தவிர, தான்தோன்றித்தனமாக அனைவரும் தங்கள் விருப்பத்திற்குச் செயல்படக் கூடாது என்பது. அடுத்ததாக இது ஓர் தனி அமைப்பின் போராட்டம் அல்ல; ஒட்டுமொத்தத் தமிழர்களின் போராட்டம் என்பதை அழுத்தமாகக் கூறுவதற்கும், தமிழ்ச் சமுதாயத்திற்குக் கேடான ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்போது நமக்குள் உள்ள எந்த வகையான வேற்றுமையாக இருந்தாலும் அவற்றையெல்லாம் விலக்கி வைத்துவிட்டுப் பொது நோக்கத்திற்காக ஒன்றுகூடிப் போராட வேண்டும். என்பதையும் சொல்கிறது.

1.8.1938 அன்று திருச்சி உறையூரிலிருந்து ஐ.குமாரசாமி பிள்ளை அவர்களைத் தலைவராகவும், சுயமரியாதை இயக்க முன்னோடிகள் ஆன 'நகரதூதன்' மணவை திருமலைசாமி, பட்டுக்கோட்டை அழகிரி, மூவலூர் ராமாமிர்தம்மாள் ஆகியோர் அடங்கிய 100 பேர் கொண்ட இந்தி எதிர்ப்பு வழிநடை பிரச்சாரப் படை 42 நாட்கள் 928 கிலோ மீட்டர் பயணித்து 87 பொதுக்கூட்டங்களை நடத்தி பரப்புரை செய்த வண்ணம் 11.9.1938 அன்று சென்னையில் கடற்கரையில் நடைபெற்ற வரவேற்பு மாநாட்டில் நிறைவடைந்தது. அந்த மாநாட்டில்தான் 'தமிழ்நாடு 'தமிழருக்கே' என்ற முழக்கம் முதன் முதலில் முழக்கமாக எழுப்பப்பட்டது. அதற்கு முன்னரும் சில ஆண்டுகள் பெரியார் வட இந்தியத் தொடர்பிலிருந்து விடுவித்துக் கொண்டு தமிழ்நாடு தனியாக இயங்க வேண்டும் என்று சொல்லி வந்திருந்தாலும், ஒரு மாநாட்டின் முழக்கமாக, நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள் எல்லோரும் இருந்த அந்த மேடையில் இருந்து 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது. அதுதான் தமிழ்த் தேசியத்தின் முதல் விடுதலைக் குரலாக எழுந்த குரலாகும். ஆனால் இன்றளவும் முதலமைச்சராவதுதான் தமிழ்த் தேசியம் என்றிருக்கும் சில அறிவிலிகளுக்கு அந்த வரலாறு தெரிந்திருக்க வாய்ப்பில்லாமல் இருக்கலாம்; ஆனால் வரலாறு இதுதான்.

அடுத்ததாக தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு 1938 நவம்பர் 13 ஆம் நாள் சென்னையில் மறைமலை அடிகள் அவர்களுடைய மகள் நீலாம்பிகை தலைமையில் நடந்தேறியது. அந்த மாநாட்டிலும் தமிழ்நாட்டில் 100-க்கு 95 பேர் தாய்மொழியில் கூடக் கல்வியற்று இருக்கிற நிலையில் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகப்படுத்தி இருக்கிற அரசைக் கண்டித்தும், தமிழர்கள் தங்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு பார்ப்பனப் புரோகிதர்களைத் தவிர்க்க வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார் அவர்களை, ஈ.வெ.ரா என்றும், தோழர் ராமசாமி என்றும், இராமசாமி பெரியார் என்றும் பல்வேறு முறைகளில் அழைப்பதை மாற்றி 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரால் மட்டுமே இனி அழைக்க வேண்டும் என்ற தீர்மானமும் அந்த மாநாட்டில்தான் நிறைவேற்றப்பட்டது. அதோடு நிற்காமல் அடுத்த நாள் 14.11.38 அன்று இந்தி எதிர்ப்புப் போரில் பெண்கள் பங்குபெறத் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து வாரம் ஒரு நாள் பெண்களே பங்கு பெறுகிற போராட்டம் நடைபெற்றது. அடுத்த செயல் திட்டமாக முதலமைச்சரின் இல்லத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் என்று அணி அணியாகத் தொடர்ந்து நடத்தினார்கள்.

இந்நிலையில் சிறைக்கொடுமையால் நடராசன், தாளமுத்து என்ற இரு தோழர்கள் 1939-இல் ஜனவரி 15, மார்ச் 12 ஆகிய நாட்களில் இறந்தனர். இந்நிகழ்வு தமிழர் நெஞ்சில் சினத்தை மேலும் கூட்டியது. போராட்டம் முதலமைச்சர் இல்லத்தின் முன்னர் என்பதை மாற்றி பள்ளிகள் முன்பும் பொது இடங்களிலும் நடக்கத் தொடங்கின. பள்ளி விடுமுறை நாட்களில் போராட்டம் இராது. பள்ளிகளுக்குக் கோடை விடுமுறை விடப்பட்டதும் போராட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. இதற்கிடையில் மே மாத இறுதியில் சிறையிலிருந்த பெரியார் விடுதலை செய்யப்பட்டார். ஜூன் மாத முதல் வாரத்தில் போராட்ட சர்வாதிகாரிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். எனினும் போராட்டங்கள் தொடர்ந்தன.

இந்நிலையில் 27.10.1939 அன்று சில அரசியல் காரணங்களுக்காக ராஜாஜி ஆட்சி கவிழ்ந்தது. சென்னை ஆளுநரே தம் சொந்த மேற்பார்வையில் ஆட்சி நடத்தினார். புதிய ஆட்சிக்குக் கால அவகாசம் கொடுப்பதற்காகப் பலரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தீவிரக் கிளர்ச்சியை மட்டும் கொஞ்ச காலம் நிறுத்தி வைக்குமாறு, பெரியார் வேண்டுகோள் விடுத்தார். அதுவரை 73 பெண்கள், 32 குழந்தைகள் உட்பட 1,271 பேர் சிறையில் இருந்தனர். 13.11.1939 அன்று சிறையிலிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் விடுதலை செய்யப்பட்டு, இந்தியைப் புகுத்துவதில்லை என்று உறுதியும் தரப்பட்டதைத் தவிர, ஏற்கெனவே இந்தி பாடமாக வைக்கப்பட்ட பள்ளியில் இருந்து அதை ஒழிக்க, புதிய ஆட்சி ஆவன செய்யவில்லை. இது கண்ட தமிழர் மீண்டும் முரசு கொட்டினர். 31.12.1939 அன்று காஞ்சியில் கூடினர். அப்பாசறைக் கூட்டத்திற்கு சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். இந்தி எதிர்ப்பு வரலாற்றை அவர் விளக்கிப் பேசியதைத் தொடர்ந்து உரையாற்றிய பெரியார், "இந்தி ஒழிய வேண்டும்! இல்லையேல் தமிழர் சிறையில் மடிய வேண்டும்!" என்று முழங்கினார். இதற்கிடையில் பிப்ரவரி இறுதிவரை வடநாட்டில் பயணம் செய்யத் திட்டமிட்டுச் சென்ற பெரியார் திடீரென பயணத்தை முடித்துக் கொண்டு பிப்ரவரி 16-இல் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

18.2.1940 சென்னையில் கூடிய கூட்டத்தில் 'இந்தி ஒழிக' என முழங்கினார். அடுத்த நாள் 19.2.40 சென்னை கோகுலே மன்றத்தில், "இதுவே இறுதி எச்சரிக்கை. இனிப்பேச்சில்லை. செயல்தான். இந்திக் கட்டாயத்தைத் தவிடுபொடி ஆக்குவதே இனி வேலை! கட்டாய இந்தியைத் தொலைப்பார்களா இல்லையா? என்ன சொல்லுகிறார்கள் இந்த ஆட்சியினர்?" என்று கேட்டார். 19.2.1940-இல் பெரியார் தனது இறுதி எச்சரிக்கையை விடுத்தார். 21.2.1940-இல் கட்டாய இந்தியை நிறுத்தி வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

"கட்டாய இந்தி முறை பொதுமக்களில் பெரும்பாலானோரிடையே எதிர்ப்பையும் அதிருப்தியையும் விளைவித்து இருக்கின்றது. முதல் மூன்று பாரங்களில் தேர்வு எதுவும் இல்லாமல் இந்தியைக் கட்டாயப் பாடமாக மட்டும் கற்றுக் கொடுப்பதால்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### தலையங்கம்

# இடஒதுக்கீட்டிற்கு பேராபத்து!

ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இடஒதுக்கீட்டை ஒவ்வொரு கல்லாகப் பெயர்த்தெடுக்கிற முயற்சியை பாஜக மிகக் கவனமாக செய்துகொண்டே இருக்கிறது. 10 ஆண்டுகள் ஆட்சிக்காலம் முடியும் இத்தருவாயில், இடஒதுக்கீட்டை ஒரே அடியாக ஒழித்துக் கட்ட துணிந்திருக்கிறது பாஜக அரசு. உயர்கல்வி நிறுவனங்களில் அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டுதல் ஒன்றை கடந்த வாரம் பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) வெளியிட்டிருந்தது. எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை நிரப்ப போதுமான ஆட்கள் இல்லாவிட்டால், அந்த இடங்களை பொதுப்பிரிவுக்கு (ஓ.சி.) மாற்றிக் கொள்ளலாம் என்பது அந்த அறிக்கை.

ஒன்றிய அரசு பணியிடங்களில் ஏற்கெனவே, பெரும்பான்மை இடங்களை பார்ப்பனர்கள் உள்ளிட்ட உயர்ஜாதியினரே ஆக்கிரமித்துக் கொள்ளும் போக்குதான் நிலவிக் கொண்டிருக்கிறது. இடஒதுக்கீட்டை அதிகரித்து சமூகத்தை சமத்துவமடையச் செய்ய வேண்டிய தேவைகள் இருக்கையில், இடஒதுக்கீட்டின் நோக்கம் நிறைவேறும் முன்பே அதை ஒட்டுமொத்தமாக குழி தோண்டிப் புதைக்கும் முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

கடும் எதிர்ப்புகளுக்குப் பிறகு பல்கலைக்கழக மானியக் குழு வரைவறிக்கையை திரும்பப் பெற்றிருக்கிறது. ஆனாலும் பாஜகவின் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் நடந்தவற்றை அசைபோட்டுப் பார்த்தால், பல்கலைக் கழக மானியக் குழு பின்வாங்கவில்லை, மீண்டும் பாய்வதற்கு காலத்தை எதிர்பார்த்துப் பதுங்கியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். 12-ஆம் வகுப்பு மதிப்பெண்ணைக் கொண்டு, இடஒதுக்கீடு அடிப்படையில் மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வந்த நிலையில், நீட் தேர்வை கட்டாயமாக்கியது ஒன்றிய அரசு. நீட் தேர்வுதான் தகுதியான மாணவர்களை உருவாக்கும் என்ற வாதத்தையும் முன்வைத்தனர்.

நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாடு அரசின் தீர்மானங்களுக்கும் இதுவரை ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ ஒப்புதல் தரவில்லை. நீதிமன்றங்களிலும் நீட் தேர்வுக்கு எதிராகவே வாதங்களை முன்வைக்கிறது ஒன்றிய அரசு. ஆனால் அதே நீட் தேர்வில் ஜீரோ பெர்சண்டைல் மதிப்பெண் எடுத்தாலும் மருத்துவப் படிப்பில் சேரலாம் என கடந்தாண்டு செப்டம்பரில் அறிவித்தது ஒன்றிய அரசு. 12 வருட பள்ளிப்படிப்புக்கு அர்த்தமில்லை, நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண்ணுக்கு கீழ் எடுத்தாலும் சீட் உண்டு என்றால் உண்மையிலேயே அது தகுதித்தேர்வுதானா?

நீட் மட்டுமல்ல, சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களை மீட்க உருவாக்கப்பட்ட இடஒதுக்கீட்டின் நோக்கத்தை சிதைத்து சின்னாபின்னமாக்க, உயர்ஜாதி ஏழைகளுக்கு பொருளாதார அடிப்படையிலான 10% இடஒதுக்கீட்டை (ews) வலிந்து கொடுத்தது பாஜக அரசு. பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டை கொடுக்கவில்லை என்பதற்காகவும் சேர்த்தே 1951-ஆம் ஆண்டில் ஒன்றிய சட்ட அமைச்சர் பதவியை புரட்சியாளர் அம்பேத்கர் ராஜினாமா செய்தார். அதன்பிறகு 1980-இல் மண்டல் கமிசன் அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்பும் கூட, 10 ஆண்டுகள் கழித்து வி.பி.சிங் ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒதுக்கீடு அமலுக்கு வந்தது. ஆனால் உயர்ஜாதி ஏழைகளுக்கான இடஒதுக்கீட்டை யாரும் கேட்காமல், எந்த போராட்டமும் நடக்காமல், ஆணையங்கள் அமைத்து அறிக்கை பெறாமல் மூன்றே நாட்களில் நடைமுறைப்படுத்தியது பாஜக அரசு.

இன்னொருபக்கம் மருத்துவ மேற்படிப்பில் அகில இந்திய ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தாமல் பிற்படுத்தப்பட்ட மாணவர்களை வஞ்சித்தது பாஜக அரசு. இதனை நடைமுறைப்படுத்தக்கோரி திமுக அரசு உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தியபோது, எதிராக வாதாடவும் செய்தது பாஜக அரசு. பின்னர் திமுக அரசின் வாதங்களுக்கு சாதகமாகவே தீர்ப்பு வரப்போகிறது என்பதை அறிந்து அவசர அவசரமாக, மருத்துவ மேற்படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசி மாணவர்களுக்கு 27% இடஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவித்தார் நரேந்திர மோடி. இந்தியா முழுமைக்கும் இருக்கிற எல்லா மாநிலங்களைச் சேர்ந்த இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் இடஒதுக்கீட்டு உரிமையையும் நிலைநாட்டியது திமுக அரசு.

நீட் தேர்வில் கிராமப்புற மாணவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுவதை தவிர்க்கும் விதமாக, முந்தைய அதிமுக ஆட்சி நீட்டை ஒழிக்கும்வரை மாற்று ஏற்பாடாக அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள் இடஒதுக்கீட்டை கொண்டுவந்தது. ஆனால் அந்த மசோதாவுக்கும் ஒன்றிய அரசின் ஏவலாளியான ஆளுநர் கையெழுத்திட மறுக்க, அரசிதழில் வெளியிட்டு நடைமுறைப்படுத்தியது அதிமுக அரசு. அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டம்தானே என்ற பாகுபாடு இல்லாமல், அதை அனைத்து தொழிற்கல்விக்கும் விரிவுபடுத்திய திமுக அரசு, கட்டணச் செலவையும் ஏற்றுக்கொண்டது. ஆனால் நீட் தேர்வு விவகாரத்தில் மாநிலத்தின் ஒருமித்த குரலாய் அரசியலுக்கு அப்பாற்பட்டு நிற்க வேண்டிய எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவோ, திமுக எதிர்ப்பு அரசியலைத்தான் இதிலும் செய்துகொண்டிருக்கிறது.

அருகே உள்ள புதுச்சேரியிலும் முந்தைய நாராயணசாமி அரசு, இதேபோல 10% உள்இடஒதுக்கீடு வழங்கும் முடிவை எடுத்தபோது, அப்போதிருந்த ஆளுநர் முட்டுக்கட்டை போட்டார். நாராயணசாமி அரசின் முடிவு நீட் தேர்வின் நோக்கத்தை சிதைக்கிறது என்று நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்தது பாஜக அரசு. இப்படி கடந்த 10 ஆண்டுகளாகவே பல்வேறு வடிவங்களில் இடஒதுக்கீட்டை சிதைக்கிற பணியை செய்துகொண்டே இருக்கிறது ஒன்றிய அரசு. அதன் நீட்சியாகத்தான் இடஒதுக்கீட்டை முற்றிலுமாக அழிக்கிற முயற்சியாக, இப்போது பல்கலைக்கழக மானியக் குழு ஒரு வரைவறிக்கையை வெளியிட்டு, எதிர்ப்புகளுக்குப் பின்னர் திரும்பப் பெற்றிருக்கிறது.

இது பாஜகவின் வழக்கமான “ஆழம் பார்க்கும் உத்தியே”. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி தொடர்ந்தால், இந்த வரைவறிக்கையை திரும்பவும் திணிக்கக்கூடிய பேராபத்து இருக்கிறது. கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை முற்றிலுமாக அழித்தொழிக்க பாஜக துணிந்துவிட்டது என்பதற்கான சமிக்ஞ்யே இது. ஒருபுறம் ராமர் கோயிலை காட்டி, இந்துக்களின் வாக்குகளை அள்ளிக்கொள்ளலாம் என கணக்குப் போட்டுக்கொண்டே, இன்னொருபுறம் இடஒதுக்கீட்டை நீக்கிவிட்டு பெரும்பான்மை இந்துக்களின் வாழ்வாதாரத்தை ஒழிக்கப் பார்க்கிறது பாஜக என்பதை நாட்டு மக்கள் உணர வேண்டும்.

# மணம் வீசும் பெரியார்!

47 - ஆவது சென்னை புத்தகக் காட்சி நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில், ஜனவரி 3 முதல் 21 - ஆம் தேதிவரை நடந்து முடிந்திருக்கிறது. இந்த ஆண்டு புத்தகக் காட்சியில் தனிநபர் ஒருவர் குறித்த நூல்கள் அதிகமான அரங்குகளில் விற்பனைக்கு இருந்தது என்றால், அது பெரியாரைப் பற்றிய நூல்கள்தான். சுமார் 60 க்கும் மேற்பட்ட அரங்குகளில். குறைந்தபட்சமாக ஒரு நூலாவது பெரியார் குறித்து விற்பனைக்கு இருந்தது.

கடந்த புத்தகக் காட்சி முதல் இந்த ஆண்டு புத்தகக் காட்சி வரையிலான காலத்தில் பெரியார் பற்றிய தலைப்பில் சுமார் 70 நூல்கள் வெளி யாகியிருக்கின்றன. 2000 - த்தின் தொடக்கம் வரை, புத்தகக் காட்சிகளில் பெரியார் குறித்த நூல்களை ஒற்றை இலக்க எண்ணிக்கையிலான பதிப்ப கங்களே விற்பனைக்கு வைத்திருக்கும். ஆனால், இப்போதோ பெரியார் நூல்களைப் பதிப்பிக்காத பதிப்பாளர்கள் கூட, பிற பதிப்பகங்களிடம் இருந்து பெரியார் நூல்களை வாங்கி அரங்குகளில் பார்வைக்கு வைக்கிறார்கள். பெரியார் நூல்கள் அரங்குகளில் இருந்தால், வாசகர்கள் நிச்சயம் உள்ளே வருவார்கள் என்ற எண்ணம் ஏற்படும் அளவுக்கு, இன்றைய இளம் தலைமுறை, பெரியார் நூல்களைத் தேடித்தேடிப் படிக்க ஆரம்பித்திருக்கிறது.

‘நீங்கள் பெரியாரை நேசிக்கலாம் அல்லது பெரியாரை எதிர்க்கலாம் ; ஆனால், ஒருபோதும் அவரைப் புறந்தள்ள முடியாது’ என்பதைத்தான் இவை காட்டுகின்றன.

நன்றி : “முரசொலி” நாளேடு 27-01-2024

## ஆகம உருட்டு

குலக்கல்வி திட்டத்தை ராஜாஜி திணிக்க முயன்றபோது, வருணாசிரம தர்மத்தை வேரறுக்க பிள்ளையார் பொம்மையை உடைக்கும் போராட்டத்தை அறிவித்தார் பெரியார். 27.05.1953 அன்று திராவிடர் கழகத்தினரால் தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் பிள்ளையார் பொம்மைகள் உடைக்கப்பட்டன. “கடவுள் பொம்மையை உடைக்கிறார்களே” என்று ராஜாஜியிடம் சிலர் கேட்க, “அது ஆகம விதிப்படி வைக்கப்பட்ட சிலை அல்ல, களிமண்ணால் செய்யப்பட்ட பொம்மை” என்றார். ஆனால் சேலத்தில் 1971-இல் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டு ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்டதோ அட்டையால் செய்யப்பட்ட ராமன் படம். அப்போதும் ராஜாஜியிடம் கேட்டார்கள், “அது பரங்கிமலை போன்ற சின்ன விஷயம், இது இமயமலை போன்ற பெரிய விஷயம். இரண்டையும் ஒப்பிடக் கூடாது” என்றாராம் ராஜாஜி. ஆக இடத்திற்கேற்றால் போல் மாற்றிக்கொள்ளும் பார்ப்பன ‘உருட்டு’தான் ஆகமம் என்பதை அப்போதே தெளிவுபடுத்திவிட்டார் ராஜாஜி.

## கழகத் தோழர் நித்தியானந்தம் காலமானார்!



*கோவை மாவட்டம், பனப்பட்டியை சேர்ந்த கழகத் தோழர் நித்தியானந்தம் (37) 25.01.2024 அன்று உடல்நலக்குறைவால் காலமானார்.*

*மறைந்த நித்தியானந்தம் கடந்த 2015ஆம் ஆண்டு தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு தொடர்ந்து பணியாற்றி வந்தார். ஜாதி ஒழிப்பு இயக்கத்தில் இணைந்ததற்காக தனது குடும்பத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்ட இவர். இரட்டைக் குவளை முறை உள்ளிட்ட தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக எந்தவித சமரசமின்றி போராடி வந்தார். ஊரின் எதிர்ப்பையும் மீறி கழகப் பரப்புரைக் கூட்டங்களை பனப்பட்டியில் கழகத் தோழர் முருகேசனுடன் இணைந்து நடத்தியவர். தொடர்ந்து தனது நண்பர்களுக்கு தனது சொந்த பணத்தை செலுத்தி புரட்சிப் பெரியார் முழக்கம் இதழை வழங்கி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## வினா விடை

• ரஜினிகாந்த் சங்கி இல்லை, அப்பாவை சங்கி என்று சொன்னால் கோபம் வருகிறது – ஐஸ்வர்யா ரஜினிகாந்த்

*பதில் : சங்கி அடையாளமல்ல, அவமானம் என மகளுக்குப் புரிகிறது, ரஜினிக்குத்தான் புரிவதில்லை.*

• சமூக நல்லிணக்கத்திற்கான விருது முகமது ஜுபைருக்கு கொடுத்தது பொருத்தமற்றது – அண்ணாமலை

*பதில் : மசூதியை இடித்து மதக்கலவரத்தை தூண்டியவர்களுக்கு கொடுக்க இது என்ன ராமராஜ்ஜியமா? ராமசாமி ராஜ்ஜியம்!*

• ராமர் கோயில் அனைவருக்கும் பொதுவானது; யார் வேண்டுமானாலும் சென்று பிரார்த்தனை செய்யலாம் – எடப்பாடி பழனிசாமி

*பதில்: கரசேவைக்கு ஆள் அனுப்பிய அதிமுகவினர் ஏன் இன்னும் செல்லவில்லை? தேர்தல் முடியட்டும் என காத்திருக்கிறீர்களோ!*

• ராமர் இல்லாமல் பாரதத்தை நினைத்துப் பார்க்க முடியாது, ராமர்தான் தேசிய அடையாளம் – ஆர்.என்.ரவி

*பதில்: பிச்சைக்காரர்கள் கூட ராமர் வேடம் போடுகிறார்கள், அதற்காக அதுதான் பாரதத்தின் அடையாளம் என்று சொல்ல முடியுமா மிஸ்டர் ரவி?*

• அனைவரையும் சமமாக மதித்து சமூக நீதிக்கு வித்திட்ட நாயகன் ராமர் – தமிழிசை சவுந்திரராஜன்

*பதில்: தவம் செய்ததற்காகவே சூத்திரனான சம்பூகனை கொன்ற பார்ப்பனச் சமூக நீதி காவலர் ஆயிற்றே ராமர்.*

# பெரியார் பெயரைக் கேட்டாலே மோடியும், அமித் ஷாவும் அலறுவது ஏன்? (3)



**பேராசிரியர் ஜெயராமன்**

***(25.01.2024 இதழில் வெளியான உரையின் தொடர்ச்சி)***

இந்தியா விடுதலை அடையும் நேரத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மனுஸ்மிருதியை அரசியல் சட்டமாக்க வேண்டும் என்று கேட்டார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட மிகப்பெரிய தலைவர்களில் ஒருவராக போற்றப்படுகிற பாலகங்காதர திலகர் அடிப்படையில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த சித்பவன் பார்ப்பனர் பிரிவைச் சேர்ந்தவர். மராட்டியத்தில் சிவாஜி மற்றும் அவரது வகையறாக்கள் சத்ரபதிகள். பிரதமருக்கு பேஷ்வாக்கள் என்று பெயர். மன்னர்கள் குடித்துவிட்டு நடனமாடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஆட்சியதிகாரத்தை சித்பவன் பார்ப்பனர்கள் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அவர்களுக்கு கீழே தான் கெய்க்வாட், பான்சிலேவ், சிந்தியா, கோல்கார் உள்ளிட்ட மராட்டியப் பகுதித் தலைவர்கள் இருப்பார்கள். பின்னர் ஆங்கிலேயர்களுடன் போர் புரிந்து அந்த மராட்டிய பேஷ்வாக்களை தோற்கடித்துதான் மராட்டியப் பகுதிகளை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர்.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்ட சித்பவன் பார்ப்பனர்கள், வெளியேறும்போது இந்த நாட்டை எங்களிடம் (சித்பவன் பார்ப்பனர்களிடம்) தந்துவிட்டு செல்லுங்கள் என்றனர். சித்பவன் பார்ப்பனர்கள்தான் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று கூறி பார்ப்பன ராஜ்ஜியம், ராம ராஜ்ஜியம், இந்து ராஷ்டிரம் ஆகியவற்றை உருவாக்கி, சனாதன தர்மத்தை நிலைநிறுத்துவோம் என்ற குறிக்கோளை வைத்து ஒரு அமைப்பைத் தொடங்கினார்கள். அந்த அமைப்பிற்கு ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்) என்று பெயர். அந்த அமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றிய அனைவரும் சித்பவன் பார்ப்பனர்கள்.

ஆர்.எஸ்.எஸ்-இன் மிக முக்கிய தலைவரும் காந்தியும் கொலை செய்ய திட்டம் வகுத்துக் கொடுத்தவருமான சாவர்க்கர் ஒரு சித்பவன் பார்ப்பனர். காந்தியாரை கொலை செய்த நாதுராம் கோட்சே சித்பவன் பார்ப்பனர். ஆர்.எஸ்.எஸ்.ஸின் குரு ஜீ கோல்வாக்கர் ஒரு சித்பவன் பார்ப்பனர். இன்றைக்கு ஆர்.எஸ்.எஸ் தலைவராக இருக்கக்கூடிய மோகன் பகவத் ஒரு சித்பவன் பார்ப்பனர். இந்த நாட்டில் என்ன என்ன மாற்றங்கள் வேண்டுமானாலும் நிகழலாம். ஆனால் இங்கு சனாதனத்தை நிலைநிறுத்தி இந்து ராஷ்டிரத்தை படைத்துவிட வேண்டும் என்ற அவர்களது கொள்கையில் மட்டும் ஒரு போதும் மாற்றமில்லாமல் இருக்கிறார்கள்.

சில பேர் இந்துராஷ்டிரம் என்றவுடனே அது நமக்கானது தானே என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். இந்து ராஷ்டிரத்தில் இந்துக்கள் சூத்திரர்களாகத்தான் வாழ வேண்டும். காந்தி கூட இந்துதான். அவரை கொலை செய்த கோட்சேவும் இந்துதான். காந்தி தன்னை சனாதனவாதி என்று சொல்லிக்கொண்டவர். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் அவரவர் வேலைகளை செய்வது சரிதான் என்று சொன்னவர் காந்தி. ஆனால் சனாதன காந்திக்கு, காந்திக்கு என்ற இந்துவுக்கு இந்துராஷ்டிரத்தில் வாழத் தகுதி கிடையாது என்று கொல்லப்பட்டார்.

நாம் நினைப்பதைப் போன்று இந்து ராஷ்டிரம் என்பது சாதாரணமானது அல்ல, அது எவ்வளவு கொடூரமானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் பழைய சாம்ராஜ்ஜியத்தை கட்டமைக்க நினைக்கிறார்கள். இந்த நிலையில்தான் அவர்கள் இன்றைக்கு இந்தியாவை "பாரத்" என்று அழைப்போம், சனாதனத்தை மீண்டும் நிறுவுவோம் என்கிறார்கள். 1984-இல் பாஜகவின் தலைவராக அடல் பிகாரி வாஜ்பாய் இருந்தார். அவரை நல்லவர் என்று கூறிக்கொள்வார்கள். அன்றைக்கு பாஜகவுக்கு இரண்டு எம்.பி.க்கள் மட்டும்தான் இருந்தனர். அந்த சமயத்தில் வெளிநாட்டில் பேசிய வாஜ்பாய், எங்களுக்கு மட்டும் சாதகமான சூழ்நிலை அமைந்தால் நாங்கள் விரும்பும் "கனவு இந்தியா"வை கட்டமைத்தே தீருவோம், பாரதத்தை அமைத்தே தீருவோம் என்றார்.

அந்த நேரத்தில் இரண்டு எம்.பி.க்கள் மட்டும் இருந்ததால் அவர்கள் அடக்கி வாசித்தனர். இன்றைக்கு 303 எம்பிக்கள் பாஜகவுக்கு மட்டும் உள்ளனர். பின்னர் ஆதரவு கட்சிகள் உள்ளனர். ஜனநாயக முறையில் நாடாளுமன்றத்தில் இந்தியாவை ஒரு சர்வாதிகார நாடாக, இந்து ராஷ்டிர நாடாக அறிவிக்க முடியும். ஆனால் அவர்கள் அமைதிகாப்பது எதை உணர்த்துகிறது என்றால், வருகிற 2024 தேர்தலில் வெற்றிபெற்றால், பேண்ட், சட்டை அணிந்துகொண்டு, காரில், பைக்கில் செல்வதற்கெல்லாம் முடிவுகட்டுவார்கள்.

புதியக் கல்விக் கொள்கையை பாஜக திட்டமிட்டே கொண்டுவருகிறது. இதுவரைக்கும் இருந்த கல்விக் கொள்கை வேறு நோக்கம் கொண்டது. இப்போது தேசியக் கல்வியை புத்துருவாக்கம் செய்யக்கூடிய கல்விக் கொள்கை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த கல்விக் கொள்கையில் 3,5,8வது படிக்கும் குழந்தைகளுக்கு பொதுத் தேர்வு. இந்த கல்விக் கொள்கையை வடிவமைத்த கஸ்தூரி ரங்கன். எட்டாவது படிக்கும் குழந்தைகளுக்கு மூன்று வாய்ப்புகள் தரப்படும். அந்த மூன்று வாய்ப்புகளையும் அந்த குழந்தை தவறவிட்டால் திருப்புளி, ஸ்பேனர் எடுத்துக் கொண்டு கூலி வேலைக்கு செல்ல வேண்டும் என்று கூறுகிறார். எட்டாவதுக்கு மேல் கற்பதைத் தடுப்பதும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும், முதலாளிகளுக்கும் குறை கூலி தொழிலாளர்களை உருவாக்குவதும்தான் புதியக் கல்விக் கொள்கையின் நோக்கம். இதற்கு பார்ப்பனிய பனியா சாம்ராஜ்ஜியம் என்று பெயர்.

> **"பெரியார் என்ற பிம்பத்தை, பேருருவத்தை தகர்த்தாக வேண்டும். திராவிடம் என்ற கருத்தியலை தகர்த்தாக வேண்டும். அப்படி தகர்த்தெரியாவிட்டால் இந்து ராஷ்டிரத்திற்குள் தமிழ்நாட்டைக் கொண்டுவர முடியாது. அந்த கவலையில்தான் அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இந்தியா முழுவதும் இந்து என்ற அடைமொழியோடு செல்லும் அவர்கள், தமிழ்நாட்டிற்குள் மட்டும் தமிழ் முழக்கத்துடன் வருகிறார்கள்."**

3வது வகுப்பில் இருந்தே இந்தி, சமஸ்கிருதத்தை திணித்து விருப்பப்பட்ட மொழியாக வைத்துக்கொள் என்கிறார்கள். இங்கு ஒரு காலம் வரைக்கும்தான் இந்தி மொழி, பின்னர் சமஸ்கிருதம்தான் இங்கு ஆட்சி மொழி. அதற்காகவே இப்போது புதிய நாடாளுமன்றத்தைக் கட்டியுள்ளனர். உள்ளே நுழைந்தால், ராமாயண, மகாபாரத காட்சிகளைக் கலைப் பொக்கிசமாக வடிவமைத்துள்ளனர். 888 உறுப்பினர்கள் அமர்வது போன்று அந்த கட்டடத்தை உருவாக்கியுள்ளனர். இப்போது 543 மக்களவை உறுப்பினர்கள்தான்.

தமிழ்நாடு மூன்றாக பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு என்ற ஒரு மாநிலமே இங்கு இருக்காது என்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்தையும் பிரித்து அதற்கு ஜனபதகங்கள் என்று பெயர்சூட்டி பெரிய மாவட்டங்களாக மாற்றுவோம் என்கிறார்கள். அப்படியானால் மாநிலங்கள் இருக்காது, நிர்வாக பிரிவுகள் மட்டும்தான். இதைச் செய்தே தீருவோம் என்பதில் உறுதியாக உள்ளனர். இவ்வாறு அவர்கள் இந்து ராஷ்டிரம் என்ற சனாதன் சாம்ராஜ்ஜியத்தை மீண்டும் நிறுவுவதற்கான வேலைகளை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

கிண்டி ஆளுநர் மாளிகைக்கு எதிரே சாலையில் ஒருவர் பெட்ரோல் குண்டு வீசினார். அது தரையில்தான் விழுந்தது. உடனே ஆபத்து என்று கூறி அமளி செய்தனர். ஆனால் நாடாளுமன்றத்தின் பார்வையாளர் பகுதியில் இருந்து குதித்து கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினான். அவன் பாஜக நாடாளுமன்ற உறுப்பினரின் அனுமதிக் கடிதத்துடன்தான் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தான். இதற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கேள்வி எழுப்பினார்கள். சொல்ல முடியாது என்பதோடு, கேள்வி எழுப்பிய 154 எம்.பி.க்களையும் இடைநீக்கம் செய்தது ஒன்றிய பாஜக அரசு. இவர்கள் இதற்குமேலும் செய்யத்துணிவு கொண்டவர்கள். கேட்க நாதி கிடையாது, இந்து ராஷ்டிரம், சனாதனம் மீண்டும் நிறுவப்படும் என்பதில் அவர்கள் மிகவும் தீர்மானமாக உள்ளனர்.

பாலகங்காதர திலகர் குறித்து முன்பு சொன்னேன், அவரும் சித்பவன் பார்ப்பனர்தான். சோலாப்பூரில் பேசும்போது அவர் சொல்கிறார். "செக்கு ஓட்டுபவனும், தராசு பிடிப்பவனும், மளிகைக் கடையில் வேலை செய்பவனும், விறகு உடைப்பவனும் எதற்காக சட்டமன்றத்திற்குச் செல்ல வேண்டும்? அவரவர் தொழில்களைப் பாருங்கள், சட்டமன்றத்தை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். பிராமணர்கள் செல்ல வேண்டிய இடம் அது. நீ என்ன உனது வருண, ஜாதித் தொழில்களை விட்டுவிட்டு வருகிறாய்?" என்று கேட்டவர் பாலகங்காதர திலகர்.

1952-இல் சென்னை மாகாணத்தில் இராஜாஜி முதலமைச்சராக இருந்தார். அப்போது குலக்கல்வித் திட்டத்தை கொண்டுவந்தார் இராஜாஜி. அதை கடுமையாக எதிர்த்து விரட்டி அடித்தவர் தந்தை பெரியார். காமராஜரை முதல்வராக்க வேண்டும் என்று சொன்னவர் பெரியார். நானா முதலமைச்சர் என்று கேட்ட போது உங்களைத்தான் சொல்கிறேன் என்று கூறி காமராஜர் முதல்வராவதை ஊக்குவித்தவர் பெரியார். 1920இல் இருந்து 1937 வரை இடையில் ஒருசில ஆண்டுகளை தவிர இங்கு நீதிக்கட்சி ஆட்சி இருந்தது. அப்பொழுதும் நீதிக்கட்சியின் மிக முக்கியமான சாதனைகளுக்கு பின்னால் தந்தை பெரியார் இருந்தார். இந்திய விடுதலைக்கு பின்னால் நடந்த பல முக்கியமான போராட்டங்களுக்கு பின்னால் தந்தை பெரியார் தான் இருந்தார். 1950இல் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த போது 'எல்லோரும் சமம்' என்று சொல்லிவிட்டோம். சமம் என்று சொன்ன பிறகும் எதற்கு இட ஒதுக்கீடு என்று கூறி பார்ப்பனர்கள் வழக்காடி இடஒதுக்கீட்டை காலி செய்தனர். பின்னர் 1951இல் அரசியல் சட்டம் முதல்முறையாக திருத்தப்பட்டு இட ஒதுக்கீடு பாதுகாக்கப்பட்டதற்கு பெரியார்தான் காரணம்.

கட்சிகளெல்லாம் வேன் வைத்து, பிரியாணி பணம் கொடுத்து ஆட்களை திரட்டிவருவார்கள். ஆனால் தந்தை பெரியார் அழைத்தால் ஒரு இலட்சம் பேர் திரள்வார்கள். ஆங்கிலேயர்கள் இரண்டுமுறை பெரியாரை ஆட்சியமைக்க கேட்டுக் கொண்டனர். ஆனால் அதை மறுத்துவிட்டார் பெரியார். அவர் ஒரு இயக்கத்தை நடத்தினார், அதனால் ஆட்சியமைக்க அழைத்தனர் என்று சாதாரணமாகக் கருதிவிடக்கூடாது. பெரியார் கூட்டம் ஒன்றை அறிவித்தால் நடத்துவதற்கு திடல் ஏது? அந்த அளவுக்கு அதிகமாக மக்கள் திரண்டனர்.

**(தொடரும்)**

**தொகுப்பு: விஷ்ணு**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## சென்னை, திண்டுக்கல்லில் கலந்துரையாடல் கூட்டங்கள்

**திருவல்லிக்கேணி :** கழக திருவல்லிக்கேணி பகுதிக் கலந்துரையாடல் கூட்டம் 27.01.2024 அன்று இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் பகுதிச் செயலாளர் ப.அருண்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நடந்து முடிந்த 24ஆம் ஆண்டு பொங்கல் விழா வரவு - செலவு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் பகுதி கழக செயல்வீரர்களுக்கு பயிலரங்கம், வருகிற நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 27.01.2024 அன்று மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அடுத்தகட்டப் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

பின்னர் பழனி அ.கலையம்புத்தூர் ஊராட்சி வண்டிவாய்க்காலில் அமைந்துள்ள தந்தை பெரியார் படிப்பகத்தை பார்வையிட்டனர்.

இதில் மாக்சிம் கார்க்கி, ராஜா, பெரியார், நாச்சிமுத்து, கபாலி, சங்கர், ஆயுதன், உஷாராணி, இம்ரான் உள்ளிட்ட திண்டுக்கல் மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கழகத் தோழர் உடலுக்கு அரசு மரியாதை!



சேலம் : கோவில் வெள்ளாரை சேர்ந்த கழகத் தோழர் K. நாகராஜ் 22.01.2024 அன்று சாலை விபத்தில் முடிவெய்தினார்.

அவரது உடல் உறுப்புகள் குடும்பத்தினரின் ஒப்புதலுடன் தானமாக வழங்கப்பட்டது. உடலுறுப்பு தானம் செய்வோரை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி தோழர் நாகராஜின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

தோழரின் உடலுக்கு கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இறுதி ஊர்வலத்தில் சேலம் மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜி, நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, தங்கமாபுரிப்பட்டினம் ராமச்சந்திரன், நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன், மூலப்பாதை கவியரசு, கோகுல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெள்ளார் சுற்றுவட்டாரப் பகுதியில் உடல் உறுப்பு தானம் செய்யப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## கொலைக் களத்துக்கு இந்துக்களை அனுப்பும் பாஜக அரசு

இஸ்ரேல் இனப்படுகொலை செய்கிறது என்று சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா அரசு தொடர்ந்த வழக்கில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்வது உண்மை தான் என்று கூறி சர்வதேச நீதிமன்றம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. இந்த சூழ்நிலையில் உத்திரபிரதேசத்தில் நடக்கும் பாஜக ஆட்சி வேலைக்கான ஒரு பரிமாற்றத்திற்கு ஒரு ஒப்பந்தத்தை போட்டுள்ளது. அதனடிப்படையில் உத்தரபிரதேசத்தில் இருந்து இஸ்ரேலுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்பிவருகிறார்கள். இஸ்ரேலில் நடந்த போரின் காரணமாக அங்கே பல நிறுவனங்களில் பணியாளர்களே இல்லாத சூழ்நிலையில் உத்தரபிரதேச அரசு இந்த ஒப்பந்ததை போட்டுக்கொண்டு உபியில் இருந்து இஸ்ரேலுக்கு ஆட்களை அனுப்பி வருகிறது.

பலரும் இந்த ஆபத்தான சூழ்நிலையில் இனப்படுகொலை நடக்கிறது என்று குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒரு நாட்டுக்கு உயிர் போனாலும் பரவாயில்லை, இங்கே வேலை கிடைக்காது, அதனால் அங்கே போகிறோம் என்று ஏராளமான இளைஞர்கள் இஸ்ரேலை நோக்கி சென்றுள்ளனர். இப்படி வேலைக்கு சென்றுள்ள இளைஞர்களை பேட்டி கண்டு இந்து ஆங்கில நாளேடு ஒரு முழுப்பக்க கட்டுரையை தீட்டியுள்ளது. அந்த இளைஞர்கள் இந்து மதத்தைச் சார்ந்த விளிம்புநிலையில் உள்ளவர்கள் ஆவார். அவர்கள் கூறுவது :- **நாங்கள் உத்தரப் பிரதேசத்தில் மிகக்குறைந்த ஊதியத்தில் வேலை செய்துகொண்டு கடுமையான துயரங்களுக்கு உள்ளாகிறோம். எனவே போர் நடந்த இடமானாலும் சரி நாங்கள் அங்கே சென்று பணியாற்ற தயாராகிவிட்டோம் என்று அந்த இளைஞர்கள் கூறியுள்ளனர்.**

இந்துக்களை காப்பாற்றுகிறோம், ராமருக்கு கோயில் கட்டுகிறோம் என்று கூறிக்கொண்டு, இன்னொரு பக்கம் எப்பொழுதும் போர் பதற்றம் நிழவும், உயிருக்கு ஆபத்தான இஸ்ரேலுக்கு உபி இளைஞர்களை வேலைக்கு அனுப்பி அதற்காக பல பிதிகளை தளர்த்தி அவர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதற்கான பணிகளை செய்துவருகிறது உபி அரசு. அதுமட்டுமின்றி இங்கிருந்து இஸ்ரேலுக்கு வேலைக்கு செல்லும் இளைஞர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற நிபந்தனை கூட அதில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. உத்தரபிரதேசத்தில் வேலையில்லாமல் தவிக்கும் அப்பாவி இந்து இளைஞர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கும் உபி பாஜக அரசின் இந்த உடன்பாடு என்பது இந்து மக்களுக்கும் மட்டுமல்ல, உழைக்கும் மக்களுக்கும் செய்கின்ற மிகப்பெரிய துரோகம் ஆகும்.

– விடுதலை இராசேந்திரன் வாட்ஸ் ஆப் பதிவு (28.01.2024)

## மொழிப்போர் தியாகிகள் நினைவிடங்களில் மரியாதை



மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளான ஜனவரி 25ஆம் தேதி அன்று சென்னை மூலக்கொத்தலத்தில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் நடராசன் – தாளமுத்து – தருமாம்பாள் அம்மையார் ஆகியோரின் நினைவு இடங்களில் கழகம் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் இரவி பாரதி, வடசென்னை துரை உள்ளிட்டோர் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

# தமிழர் மனதில் நீங்காத மனத்தாங்கல்

(முதல்பக்க தொடர்ச்சி)

மாணவர்களுக்கு அந்த மொழியில் போதிய அறிவோ திறமையோ ஏற்படாது என அரசினருக்குத் தோன்றுகிறது. ஆகவே அரசினர் இந்திக் கட்டாயத்தை உடனே எடுத்து விடுவதென முடிவு செய்து விட்டனர்” என்பதே அந்த அறிக்கை.

இந்த நேரத்தில் நாம் ஒரு செய்தியை நினைவூட்டிக் கொள்வது நல்லது என்று கருதுகிறோம். 1947-இல் பாகிஸ்தான் பிரிந்தபோது உருது மொழியை நாட்டின் பொது மொழியாக அறிவித்தது. ஆனால், மேற்கு பாகிஸ்தான் என்றும் இப்போதைய வங்கதேசம், கிழக்கு பாகிஸ்தான் என்றும் இருந்த காலகட்டத்தில் கிழக்கு பாகிஸ்தானின் மக்கள் தொகைதான் ஒப்பீட்டு அளவில் அதிகம். இவர்கள் வங்க மொழி பேசுபவர்கள். எனவே அரசியல் நிர்ணய சபையிலேயே திரேந்திரநாத் தத் என்பவர் வங்க மொழியை நாட்டு மொழியாக அறிவிக்க வேண்டும் அல்லது நாட்டு மொழிகளில் ஒன்று என்றாவது அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தும் ஏற்கப்படாததால், 1952-இல் கிழக்கு பாகிஸ்தானில் போராட்டங்கள் வெடித்தன. டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் தீவிரமாய் அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். ஆனாலும், பாகிஸ்தான் அரசு அந்தப் போராட்டத்தை அடக்க நினைத்ததே தவிர வங்க மொழியையும் ஒரு தேசிய மொழியாய் அங்கீகரிக்க ஒப்பவில்லை. எனவே வீரியமாய் நடந்த அப்போராட்டங்களில் துப்பாக்கிச் சூடும் நடந்தது. அதில் ஐந்து மாணவர்கள் கொல்லப்படவும் நூற்றுக்கணக்கான பேர் காயம் ஏற்படவுமான சூழல் ஏற்பட்டது. அதற்குப் பின்னால் வங்கதேசம் தனி நாடாக உருவாகி வங்க மொழி நாட்டு மொழியாகவும் ஆகிவிட்டது.

வங்கதேசத்தைச் சேர்ந்த அறிஞர்கள் ஐ.நா. மன்றப் பொதுச்செயலாளர் கோபி அன்னானுக்கு இறந்து போன ஐந்து தோழர்களைக் கௌரவிக்கும் வகையில் அந்த நாளை உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தனர். அதை ஏற்றுக் கொண்டுதான் ஐ.நா பிப்ரவரி 21 உலக தாய்மொழி நாள் என 1999-இல் அறிவித்தது. ஆனாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த போராட்டங்கள், 1,300 பேருக்கு மேல் சிறைப்பட்டும் 2 தோழர்கள் சிறையில் இறந்தும் நடந்த தொடர் போராட்டம், தாய்மொழிக் காப்புக்காய் நடந்த அந்தப் போராட்டத்தை உலகத் தாய்மொழி நாளாக இணைத்து அறிவிக்கவில்லையே என்ற மனத்தாங்கல் தமிழர் ஒவ்வொருவர் மனதிலும் நிலவிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் சுட்டிக்காட்டி ஆக வேண்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : February 02, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran